
பாரகன் பிக்சர்ஸ்
அன்னையின்
ஆணை
டைரக்ஷன்:
CH. நாராயணமூர்த்தி B.A.
தயாரிப்பு:
A.M.M. இஸ்மாயில்
G.H.RAO

# அன்னையின் ஆணை

★★★

நடிகர்கள்

சிவாஜி கணேசன்
M. N. நம்பியார்
S. V. ரெங்கா ராவ்
V. R. ராஜகோபால்
M. R. சந்தானம்
O. A. K. தேவர்
K. K. பெருமாள்
மாஸ்டர் பாஜி
K. V. சீனிவாசன்

நடிகைகள்

K. சாவித்திரி
M. N. ராஜம்
M. பண்டரி பாய்
T. P. முத்துலெட்சுமி
S. R. ஜானகி
பேபி உமா
ராஜேஸ்வரி
R. சரோஜா
மீனு குமாரி

கண்ணன், பட்டுசாமி, விஜயபால், S.K. ராமராஜன், தேசிகன்

நடனம்

பத்மினி பிரியதர்சினி, ரீட்டா, சந்திரா.

பாடல்கள்

A. மருதகாசி, கா. மு. ஷெரிப், கு. மா. பாலசுப்பிரமணியம், கோபாலகிருஷ்ணன், வ. சோமநாதன்.

பின்னணி பாடியவர்கள்

T. M. சௌந்தரராஜன், C. S. ஜெயராமன், சீர்காழி கோவிந்தராஜன், S. C. கிருஷ்ணன், P. சுசீலா, ஜிக்கி, P. லீலா, ரெத்தினமாலா, A. P. கோமளா.

*இசை அமைப்பு :*
S. M. சுப்பையா

*நடன அமைப்பு :*
B. ஹீராலால்

வசனம்

*முரசொலி மாறன்,* எம். ஏ.,

## கதைச் சுருக்கம்

பலரை வஞ்சித்து தன் வாழ்வை வளமாக்கிக் கொண்ட பாதகனை பரோபகாரம் தன்னுடைய மானேஜர் சங்கரையும் பொய்க் குற்றம் சாட்டி சிறையிலடைத்து விடுகிறன். பூரண கர்ப்பிணியான தன் மனைவியைப் பார்க்கச் சிறையிலிருந்து தப்பியோடியபோது போலீஸாரால் தாக்குண்ட சங்கர் மிகவேதனையுடன் வீட்டை அடைகிறன். தன் மகன், பரோபகாரத்தை பழிவாங்கச் செய்ய வேண்டுமென்ற உறுதிமொழியை தன் மனைவியிடம் பெற்றுக் கொண்டு உயிர்நீத்தான். கௌரி தன் மகனுக்கு **கணேஷ்** எனப் பெயரிட்டு, கஷ்டப்பட்டு உழைத்து அவனைப் படிக்க வைக்கிருள்.

மாணவர்களில் முதல்வனக திகழ்ந்த கணேஷ் கல்லூரி ஆண்டு விழாவில் நடந்த "**சாம்ராட் அசோகன்**" நாடகத்தில் அசோகனக நடித்து தலைமை தாங்கிய கருணகரரிடமிருந்து பரிசு பெறுகிறன். தன்மகன் சங்கர் மாண்டான் என்ற செய்தியை கணேஷ் மூலம் அறிந்த கருணகரர் அதிர்ச்சியடைகிருர். கருணகரர் தன் தாத்தா என்பதை தெரிந்து கொண்ட கணேஷ் தன் தாயிடம் தெரிவிக்க செல்கிறன் – தாயை மரணப்படுக்கையில் காண்கிறன். பரோபகாரத்தின் கொடுமைகளைக்கூறி அவனைப் பழிவாங்க வேண்டுமென்று ஆணையிட்டு மகனிடமிருந்து உறுதிபெற்று மரணத்தை அணைத்துக் கொள்கிருள் கௌரி. கருணகரர் சொத்து முழுவதும் கணேஷிற்கே எழுதி வைத்து உயிர் துறக்கிருர்.

வக்கீல் பாலு பரோபகாரத்தின் தொழிற்சாலைக்கு ஆலோசகர். சுந்தரி என்ற நாட்டியக்காரியை கெடுத்தவன். பரோபகாரத்தின் மகள் **பிரேமா**வை மணக்க ஆசை வேறு இருந்தது அவனுக்கு.

ஒருநாள் பிரேமா சென்று கொண்டிருந்த காரின் "ஹாரன்" கோளாராகிறது. அவ்வழி வந்த கணேஷ் அதைச் சரி செய்து அனுப்பிவைக்கிறன். இருவருக்கும் காதல் பிறக்கிறது.

கணேஷ் பணக்காரனென அறிந்த பரோபகாரம் தன் மகள் பிரேமாவை அவனுக்கு மணம் முடிக்க ஆசைப்படுகிறன். தன்னுடைய காதலி பிரேமா பரோபகாரத்தின் மகளென அறிந்து காதலுக்கும் கடமைக்குமிடையே வேதனையடைகிறன் கணேஷ்.

கணேஷின் அழைப்பை ஏற்று விருந்திற்குச் சென்ற பரோபகாரம் வீடுதிரும்பவில்லை. இதையறிந்த பாலு பிரேமாவை பயமுறுத்தி தன்னை மணக்க வற்புறுத்தி சம்மதம் பெற்று விடுகிறன்.

பரோபகாரம் என்ன ஆனர்?

பிரேமாவின் திருமண முடிவுஎன்ன?

கணேஷ் காதலுக்கும் கடமைக்குமிடையே போராடி தன் "**அன்னையின் ஆணை**"யை எவ்வாறு நிறைவேற்றினன்?

**விளக்கம் . . . . . . . . . வெண்திரையில்.**

# அன்னையின் ஆணை

## பாடல்கள்

### 1

பாடியவர்: பி. லீலா. இயற்றியவர் : அ. மருதகாசி

நீயே கதி ஈஸ்வரி - சிவ
காமி தயா ஸாகரி - எனக்கு [நீயே]

மாயா உலகிலே ஓயாத துயராலே
வாடாமலே ஒரு வழிகாட்டவே - எனக்கு [நீயே]

ஆவியே அமுதே ஆகமப்பொருளே
அன்புடன் தாராயோ உன் திருவருளே
ஆவதும் அழிவதும் யாவும் உன்னாலே
அன்னையே பாராயோ? என்னையும் கண்ணாலே

தீயவர் வாழவும் நல்லவர் தாழவும்
செய்வதேனோ? இது தர்மந்தானோ? அம்பா - [நீயே]

### 2

பாடியவர் : சி. எஸ். ஜெயராமன் இயற்றியவர் : அ. மருதகாசி
ஏ. பி. கோமளா

(தொகையரு)

கொல்லாதே இதுபோலே
பொல்லாத உலகமே
உள்ளபடி ஒரு பிழையும்
அறியாத உயிர்களையே

(பாட்டு)

கொல்லாதே இதுபோலே
பொல்லாத உலகமே - நீ
இல்லாத கொடுமையிலே - எங்களைக்
கொல்லாதே இதுபோலே

அல்லும் பகலும் பசியால் வாடி
அலைகிறோமே தெருவில் திண்டாடி
கள்ளம் கபடம் ஏதும் இல்லா
வெள்ளை உள்ளம் படைத்த எங்களை [கொல்]

அன்பும் அறமும் நெஞ்சில் இல்லையா?
அனாதைக் கிரங்கும் பண்பே இல்லையா?
துன்பம்தீர வழியே இல்லையா?
சுகவாசிகளே கருணை இல்லையா - [கொல்]

இல்லையென்று வருபவர்க்கே
இந்தாவென்று தருவதற்கே
இறைவன் பொருளைக் கொடுத்தானே - இதை
மறப்பதும் சரியோ சீமானே - [கொல்]

### 3

பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன் இயற்றியவர் : கா. மு. ஷெரீப்

(தொகையரு)

பத்துமாதம் சுமந்திருந்து பெற்றாள்
பகலிரவாய் விழித்திருந்து வளர்த்தாள்
வித்தகனாய் கல்வி பெற வைத்தாள்
மேதினியில் நாம் வாழச் செய்தாள்

(பல்லவி)

அன்னையைப் போலொரு தெய்வமில்லை - அவள்
அடிதொழ மறப்பவர் மனிதரில்லை - மண்ணில் மனிதரில்லை [அன்னை]

(அநுபல்லவி)

துன்பமும் தொல்லையும் ஏற்றுக்கொண்டே - நம்மை
சுகம் பெற வைத்திடும் கருணை வெள்ளம் [அன்னை]

(சரணம்)

நாளெல்லாம் பட்டினியாய் இருந்திடுவாள் - ஒரு
நாழிகை நம் பசி பொறுக்கமாட்டாள்!
மேலெல்லாம் இளைத்திடப்பாடுபட்டே
மேன்மையாய் நாம் வாழச் செய்திடுவாள் [அன்னை]

## 4

பாடியவர்கள் : ஏ. ஜி. ரெத்தினமாலா
சீர்காழி கோவிந்தராஜன்
எஸ். ஸி. கிருஷ்ணன்

இயற்றியவர் : அ. மருதகாசி

பட்டிக்காட்டு பெண் : என்னுசாமி என்னை அப்படிப்பாக்குறே நீ
எதுக்கு சும்மா பல்லெப்பல்லேகாட்டுறே
கன்னுபின்னு பொண்ணுயின்னு கணக்கிறே-நீ
காசைக்காட்டி மோசம் பண்ண நினைக்கிறே யாரைக்
காசைக்காட்டி மோசம் பண்ண நினைக்கிறே
என்னுசாமி ஏ-என்னுசாமி

நாகரீகமனிதன்: தென்னம்பாளை வெடிச்சதுபோல் சிரிக்கிறே-நீ
சிட்டுக்குருவி போலத்தாவி பறக்குறே - அதைக்
கண்ணால் பார்த்து என்னை மறந்து நிற்கிறேன் உன்
காதலாலே மனசு வாடித்துடிக்கிறேன்
என்னு பொண்ணு ?

பெண்: ஊம்.

நாகரீகமனிதன்: என்னு கண்ணு

பெண்: ஊம். . . ஊம். .

நாகரீகமனிதன்: என்னு பொண்ணு என்னு இப்படி முழிக்கிறே-நீ
எதுக்கு சும்மா பல்லைக்கடிக்கிறே

காக்கா: ஏ . . . .
வேஷக்கார வெள்ளிமூக்கு சிங்கம்
ஏனிப்படி வீணுனப் பிரசங்கம்
வீங்கும்படி முதுகுமேலே
வாசிப்பேன் ம்ருதங்கம்

நாகரீகமனிதன்: ஹா . . .
நான் . . . . .
வேஷக்காரனில்லே - தம்பி
கேளு எனது சொல்லே - என்
வீட்டுக்காரியாக்க - ஆசை

பெண்: ஐயே

நாகரீகமனிதன்: என்
வீட்டுக்காரியாக்க - ஆசை
வேறே எண்ணம் இல்லை - தம்பி

வேறே எண்ணம் இல்லை - கண்ணே
வேறே எண்ணம் இல்லை - எனக்கு
வேறே எண்ணம் இல்லை

பெண்: கைவரிசையெல்லாம் - நீ
காட்டவேணும் இங்கே

காக்கா: கட்டிக்கொள்ள உனக்கு ஏத்த
பொண்ணில்லையா அங்கே

நாகரீகமனிதன்: எங்கே?

பெண்: அங்கே

நாகரீகமனிதன்: ஓ . . . . . இருக்கே
பணமிருக்கு பகட்டிருக்கு
பணமிருக்கு பகட்டிருக்கு அங்கே - ஆனு
குணமிருக்கு அழகிருக்கு இங்கே
மனமிருக்கு எனக்கு ஏத்த மங்கை - உன்னை
மணமுடிக்கத் தேடிவந்தேன் இங்கே

காக்கா: ஹா . . . ஹா . . . [சிரிப்பு]

பெண்: முத்திப்போன பைத்தியம்

நாகரீகமனிதன்: ஆ . . . .

காக்கா: மூளைக்கான வைத்தியம்

நாகரீகமனிதன்: ஹா . . . ஹா . . .

பெண் - காக்கா: இது
முத்திப்போன பைத்தியம்
மூளைக்கான வைத்தியம்
சுத்தமாகச் செய்து இதைப்
போடவேணும் பத்தியம்

காக்கா: ஆமாம்.

நாகரீகமனிதன்: பித்தம் தெளிய வைத்தியம் - நீ
செய்யவேணும் அகத்தியம்
இத்தனை நாளாய் காத்திருந்தேன் - நான்
இப்போ வந்தது சமயம்

காக்கா: ஏ . . . .
நாகரீகக்காக்கா
ஜிம்தளகா ஜிம்தளகா
ஜிம்தளகா பலேஜோர்
ஏ . . . .
நாகரீகக்காக்கா - இது
நாடறிஞ்ச காக்கா

பெண்: நீ
பேசுவது கிறுக்கா - இல்லை
உண்மை இதில் இருக்கா

நாகரீகமனிதன்: சந்தேகம் எதுக்கு? வீண்
சஞ்சலமும் எதுக்கு
சத்தியமாய் நீதான் கண்ணே
தகுந்த ஜோடி என்க்கு

பெண்: சத்தியமா ?

நாகரீகமனிதன்: ஆமா . . . .

பெண்: எங்கே

நாகரீகமனிதன: இந்தா

காக்கா: தாலிக்கயிறு ஊரறியப்போடாது - செய்யும்
சத்தியத்தால் ஜம்பம் ஒண்ணும் சாயாது
நாளுவச்சு பெரியவங்க முன்னாடி - எதையும்
நடத்தவேணும் வாங்க நீங்க என்னோடே

நாகரீகமனிதன்: ஓ .... அதுக்கென்ன.

## 5

பாடியவர் : பி. சுசீலா இயற்றியவர் : வலம்புரி சோமநாதன்

(தொகையரு)

புரியாத இன்பம் - முன்பின்
அறியாத புதுமை - உருவானதே

(பாட்டு)

புரியாத இன்பம்
அறியாத புதுமை
உருவானதே - பருவம்
விரிவானதோ - பெண்மை
பயிரானதோ [புரியாத]

உள்ளம் நிலை மறந்தே
நாணம் தனை துறந்தே
கொள்ளை கொள்ளையாய்க்
கதை சொல்லுதே - இன்பக்
கதை சொல்லுதே

ஆசைக் கனவாக
அலைமோதும் எண்ணங்கள்
இசையோடு என்னுள்ளே
கவிபாடுதே - இன்பக்
கவிபாடுதே [புரியாத]

தென்றல் வரும் தழுவும்
தேன்மலர்கள் மணம் வீசும்
திங்கள் ஒளி இங்கே வந்து
தெள்ளமுதாய் பாயும்

சங்கத்தமிழ் பாடி
மெய்மறக்கக்கூடும்
பொங்கும் இன்பம் இதிலே
இல்லாத ஒன்று

இன்று -
உருவானதே - பருவம்
விரிவானதோ - பெண்மை
பயிரானதோ [புரியாத]

## 6

பாடியவர் : சுசீலா, சௌந்தரராஜன் இயற்றியவர் : கு. மா. பா.

பெண்: ஓ. ........

ஆண்: ஓ..........

பெண்: கனவின் மாயா லோகத்திலே - நாம்
கலந்தே உல்லாசம் காண்போமே - நாம்
கலந்தே உல்லாசம காண்போமே [கனவின்]

ஆண்: தீங்கனியே உன் ஆசைபோலே - நாம்
இணைந்தாடுவோம் இந்நாளே - இருவர் [கனவின்]

ஆண்: மலர்ந்தாடும் இன்பச்சோலை - ஓ....
மலர்ந்தாடும் இன்பச்சோலை
மனம் மகிழும் பொன்னான வேளை

பெண்: ஓ..........
அலைமோதும் உள்ளம் நிலைகாண - உந்தன்
துணை வேணும் இன்ப ராஜா - இருவர் [கனவின்]

ஆண்: அழகாய் நின்றாடும் மானே - ஓ.......
அழகாய் நின்றாடும் மானே
உன் மொழியே சங்கீதம் தானே

பெண்: அன்பின் உருவே மோகன நிலவின்
அமரகாவியம் பாடி ஆடுவோமே

ஆண்: ஓ...........
அமுதே எந்தன் வாழ்வுதனிலே
அழியாதே ஒளிவீசும் ஓவியம் நீயே

பெண்: ஓ...........
காதல் இல்லாது வாழ்வே நில்லாது
கண்ணா என் ஆவி நீயே - இருவர் [கனவின்]

## 7

பாடியவர்கள் : பி. லீலா, பி. சுசீலா இயற்றியவர் : அ. மருதகாசி

(பல்லவி)

வாங்க வாங்க மாப்பிள்ளே இதை
வாங்கிக்கொள்ளுங்கோ காதிலே
மங்கையர் திலகம் எங்களின் தங்கம்
மனசையும் மயக்கி மாலையிட்டீங்க [வாங்க]

(அநுபல்லவி)

கண்ணைக்கொடுத்தது மாதிரி எங்க
பொண்ணைக்கொடுத்தோம் உமக்கே நாங்க
கள்ளங்கபடம் அது அறியாது
சொல்லப்போனா ரொம்பவும் சாது
கணவன் ஸ்தானம் தன்னில் நிதானம்
காட்டியும் நீங்க நடந்துக்கவேணும் [வாங்க]

(சரணம்)

கொஞ்சும் கிளியது கூண்டுக்கிளியாய்
நெஞ்சும் வாட வாழ்விலே
கொடுமைகள் செய்யும் குணத்தை நீங்க
கொள்ளாதீங்க மாப்பிள்ளே

ஆம்பளே ஆசை அறுபதுநாள் என
ஆகாமலே மனம் நோகாமலே
அன்புடன் இருங்க எதையோ எண்ணி
அக்கம் பக்கமே பார்க்காமலே

இன்பக்கனியும் வீட்டினிலிருக்க
எச்சில் பழத்தே தேடிகிட்டு
ஏங்கித் திரியும் சில மைனர்கள் போலே
இங்கும் அங்கும் ஓடாதீங்க... [வாங்க]

## 8

பாடியவர்கள்: ஜிக்கி கோஷ்டியினர்  இயற்றியவர் : K.S. கோபாலகிருஷ்ணன்

ஒரு பெண்: ஓ....ஆயாளோ ஆயாளோ ஓ ஆயாளோ
கோரஸ்: ஓ....ஆயாளோ ஆயாளோ ஓ ஆயாளோ
ஒரு பெண்: தந்தானத்தன தானதந்தன தந்தன தந்தன தன்னுனே
தந்தானத்தன தானதந்தன தந்தன தந்தன தன்னுனே-தன
கோரஸ்: தன்னு னன்னு னன்னுனே
ஒரு பெண்: செந்தாழம்பு தலையில் சூடி சிரித்து பேசி ஆடிடுவோம்-வெகு
சிங்காரமாய் பாடிடுவோம் - மன
சந்தோஷத்திலே நிலைகொள்ளாமே ததிங்கிணதோம் போட்
[டிடுவோம்
கோரஸ்: தந்தானத்தனப்பாட்டுப்பாடும் தளுக்குக்கார மங்கையரே
எந்த ஊரு சொந்த ஊரு எடுத்துக்கொஞ்சம் சொல்வீரே
அதை எடுத்துக்கொஞ்சம் சொல்வீரே
ஒரு பெண்: வந்தவரை வாழவைக்கும் வளமிகுந்த நன்னுடு
தமிழ் ஒலிமுழங்கும் பொன்னுடு - என்றும்
வளரும் உலக கலைகள் யாவும் நிலவும் நல்ல தென்னுடு
கோரஸ்: கலைகள் யாவும் நிலவும் நாடு என்று சொல்லலாகுமா?
இது கருத்துக்குத்தான் பொருந்துமா?
மலைக்குறத்தி பரதம் தவிர மற்ற நடனம் தெரியுமா?
உமக்கு மற்ற நடனம் தெரியுமா?
ஒரு பெண்: ஆஹா...பார்

-::-

ஒரு பெண்: வண்டு கொஞ்சிக்கொஞ்சிப் பேசினுலும் மயங்காதே கண்ணே
கொஞ்சிக்கொஞ்சிப் பேசினுலும் மயங்காதே கண்ணே
கோரஸ்: நீ மயங்காதே கண்ணே
ஒரு பெண்: கண்ணே என் பொன்னே நீ ஏமாருதே சொன்னேன்
கொஞ்சிக்கொஞ்சிப் பேசினுலும் மயங்காதே கண்ணே

(தொகையரு)

ஒரு பெண்: உன் வாழ்வும் என் வாழ்வும் ஒன்றல்லவோ
கோரஸ்: ஆமாம்
ஒரு பெண்: ஆண்கள் அன்பில்லா நிலைதன்னை நான் சொல்லவோ
கோரஸ்: ஆண்கள் கொஞ்சிக்கொஞ்சிப் பேசினுலும் மயங்காதே கண்ணே
கொஞ்சிக் கொஞ்சிப்பேசினுலும் மயங்காதே கண்ணே
ஒரு பெண்: கண்ணே என் பொன்னே நீ ஏமாருதே சொன்னேன்
கண்ணே என் பொன்னே நீ ஏமாருதே சொன்னேன்
கொஞ்சிக் கொஞ்சிப் பேசினுலும்
கோரஸ்: மயங்காதே கண்ணே நீ
மயங்காதே கண்ணே - நீ
மயங்காதே கண்ணே
ஒரு பெண்: பலே பலே பலே டிர்ர்ர்
கோரஸ்: ஹைற..ஹைற..ஹைற...
ஹைற..ஹைற..ஹைற...

## 9

பாடியவர்கள்: ஜிக்கி கோஷ்டியினர்   இயற்றியவர்: K. S. கோபாலகிருஷ்ணன்

கோரஸ்: ஓ...ஓ...ஓ...ஓ...

ஒரு பெண்: ஜினுக்குததாளம்போட்டு ஆடலாம்
சிங்காரபபாட்டும் பாடிடலாம்

கோரஸ்: பலேபலே பலபேலே பலேபலே

ஒரு பெண்: ஜினுக்குத்தாளம் போட்டு ஆடலாம்
சிங்காரப் பாட்டும் பாடிடலாம்

ஒரு பெண்: மினுக்கும் உடலில் நகைகள் பூட்டியே
மினுக்கும் உடலில் நகைகள் பூட்டியே

கோரஸ்: ஜில் ஜில் ஜில் ஜில்

ஒரு பெண்: ஜொலிக்கும் சல்லா புடவை கட்டியே
ஜினுக்குததாளம் போட்டு ஆடலாம்
சிங்காரப்பாட்டும் பாடிடலாம்

ஒரு பெண்: ஹய் ஹய் ஹய்
அன்பில்லாதவங்க உறவை நாடினுல்
ஆனந்தம் காணமுடியாது

கோரஸ்: முடியாது . . .

ஒரு பெண்: அழகில்லாத பெண்நடனம் ஆடினுல்
ரசிக்காது அது ருசிக்காது
அதனுல் உலகம் அழகைநாடுது
ஜினுக்குத்தாளம் போட்டு ஆடலாம்
சிங்காரப்பாட்டும் பாடிடலாம்

கோரஸ்: ஓ . . . ஓ . . . . சிங்காரப் பாட்டும் பாடிடலாம்

:-:

ஒரு பெண்: செந்தமிழ் நாட்டு மக்களுக்கு ஒருவிந்தை மிகும்
புத்தி உண்டு மிக உண்டு அறிவுண்டு
இந்த செந்தமிழ் நாட்டுமக்களுக்கு ஒருவிந்தை மிகும் புத்திஉண்டு
எந்த மொழியையும் கற்றிடவும் அதை சொந்தமொழிபோல
[பேசிகாட்டிடவும்
செந்தமிழ்நாட்டு மக்களுக்கு ஒருவிந்தை மிகும் புத்தி உண்டு
மற்ற மொழியினர் கன்னித்தமிழ்தனை
எத்தனை ஆண்டுகள் கற்ருலும்
குற்றங்குறை யின்றிப் பேசிப்பழகிட
கூடிடுமோ தவம் செய்தாலும்

கோரஸ்: செந்தமிழ் நாட்டு மக்களுக்கு ஒருவிந்தை மிகும் புத்தி உண்டு
மிகவுண்டு அறிவுண்டு

ஒரு பெண்: ஆயாளோ ஆயாளோ ஆயாளோ.

| | |
|---|---|
| **மேக்கப்** | M. பீதாம்பரம், K. A. நடராஜன், தனகோடி, R. நாகேஸ்வரராவ், K. ராமன், |
| **உதவி** | S. ஜெயராமன். |
| **உடை அலங்காரம்** | P. ராமகிருஷ்ணன், C. K. கண்ணன், B. ராமச்சந்திரன். |
| **ஆர்ட் டைரெக்ஷன்** | C. ராகவன் |
| **செட்டிங்ஸ்** | C. குப்புசாமி நாயுடு, K. சீனிவாசன் |
| **பின்திரைச் சித்திரம்** | K. S. N. மூர்த்தி |
| **மோல்டிங்** | M. கோபால் பிள்ளை |
| **செட் பிராப்பர்ட்டீஸ்** | சினி கிராப்ட்ஸ் |
| **மின்சாரம்** | M. சங்கரநாராயணன் |
| **ஒலிப்பதிவு** | டைரெக்டர் A. கிருஷ்ணன் B. A., வசனம்– D. மோகனசுந்தரம் ரீ ரிக்கார்டிங்–K. விஸ்வநாத் B. Sc., |
| **உதவி** | R. தியாகராஜன் & S. மணிவண்ணன் |
| **ஒளிப்பதிவு** | டைரெக்டர்–J. G. விஜயம் |
| ஆபரேடிவ் காமிராமன் | பாஸ்கர், சீதாபதி, ராஜாராம் |
| **எடிட்டிங்** | M. A. பெருமாள், M. ராமதாஸ் |
| **பிராஸஸிங்** | விஜயா லாபரெட்டரி by S. ரெங்கநாதன் |

**ரிக்கார்டட் ஆன்**

**வெஸ்ட்ரெக்ஸ் ரிக்கார்ட் ஸிஸ்டம்.**

| | |
|---|---|
| உதவி டைரக்ஷன் | K. M. கோவிந்தராஜன் |
| புரொடக்ஷன் மானேஜர் | S. A. ஆறுமுகம் |
| உதவி | P. K. பாலன் |
| கண்டினியுட்டி | T. R. சீனிவாசன் |
| ஸ்டுடியோ புரோகிராம் எக்ஸிகியூட்டிவ் | S. ராமானுஜம் |
| ஸ்டில்ஸ் | R வெங்கிடாச்சாரி, பி. ஏ., |
| விளம்பரம் | G. H. ராவ் |
| புரொடக்ஷன் எக்ஸிக்யூட்டிவ் | **A. S.** சுந்தரேசன் |
| நிர்வாகம் | **T. V. C.** பழனிச்சாமி செட்டியார் |

ஸ்டுடியோ

**விஜயா & வாஹினி**

| தயாரிப்பு | கதை, சினாரியோ & டைரெக்ஷன் |
|---|---|
| **A. M. M.** இஸ்மாயில் | **C. H.** நாராயணமூர்த்தி, பி. ஏ., |

★★

வெளியீடு :

**பாரகன் பிக்சர்ஸ்,**

21, நியூபோக் ரோடு, மதராஸ்-17.

Printed at The Ideal Printers, 97, Broadway, Madras-1